04175 - 236654 / 235295

SHANMUGA INDUSTRIES
ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

# சண்முகா கல்லூரியில் ஆசிரியர் தின விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. அதனை முன்னிட்டு **மேனாள் ஜனாதிபதியும், தத்துவ மேதையுமான டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்** அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்த்தூவி சிறப்பு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து 150 ஆவது பிறந்தநாள் காணும் கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் **வ.உ.சிதம்பரம்பிள்ளை** அவர்களின் திருஉருவப் படத்திற்கும் மாலை அணிவித்து, மலர்த்தூவி சிறப்பு செய்யப்பட்டது.

கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** தலைமை தாங்கினார். பொருளாளர் **எம்.சீனுவாசன்** முன்னிலை வகித்தார். கல்விப்புல முதன்மையர் **பேரா.அழ.உடையப்பன்,** முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்,** துணை முதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** உள்ளிட்டோர் வாழ்த்தினர். தமிழ்த்துறைத் தலைவர் **இரா.சங்கர்** நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் **ந.பிரபு** டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் குறித்தும் வேதியியல் துறைத்தலைவர் முனைவர் **அ.தினேஷ்கார்த்திக்** செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரம்பிள்ளை குறித்தும் கருத்துரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் உள்ளிட்டோர் மலர்த்தூவி மரியாதை செய்தனர்.

செயலர் மற்றும் தாளாளர்



